தீர்மான நகல்

காஞ்சிபுரம் ஊராட்சி ஒன்றியம், காலூர் ஊராட்சியில் 13.03.2024 தேதியன்று புதன்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு ஊராட்சி மன்றத் தலைவர் திருமதி.S.சகுந்தலா அவர்களின் தலைமையில் ஊராட்சி மன்றத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் விவரம் பின்வருமாறு

பொருள் எண்.152

காலூர் ஊராட்சி வேடல் கிராமம் - சர்வே எண்கள். 143A/1, 2, 3A, 144/1A, 1B, 1C2, 2A, 2B, 2C1, 146/2 & 147-ன் மொத்த விஸ்தீரணம் 9.60 ஏக்கர் (அ) 38860 ச.மீட்டர் பரப்பளவில் அமைந்துள்ள உத்தேச குடியிருப்பு வீட்டு மனைப்பிரிவில் (Layout) உள்ளடங்கிய பூங்கா-1, பூங்கா-2, பொது உபயோக மனை, அனைத்து சாலைகள், மூலை முடுக்குகள் மற்றும் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு ஒப்படைக்கப்பட வேண்டிய பகுதி அடங்கிய வரைபடத்திற்கு தொழில் நுட்ப அனுமதி (Techical Sanction) மாவட்ட நகர் ஊரமைப்பு துணை இயக்குநர்/உறுப்பினர் செயலர்(பொ), காஞ்சிபுரம் அவர்களின் கடித ந.க.எண். A1O6ZSAE/2024/TCP நாள்.06.03.2024 -ன்படி நாளிட்ட கடிதத்தில் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

அதனை தொடர்ந்து தொழில் நுட்ப ஒப்புதல் அளிக்கப்பட்ட Blue Print வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பூங்கா-1, பூங்கா-2, பொது உபயோக மனை, அனைத்து சாலைகள், மூலை முடுக்குகள் மற்றும் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு ஒப்படைக்கப்பட வேண்டிய பகுதி ஆகியன காலூர் ஊராட்சியின் பெயரில் பத்திர பதிவு செய்யப்பட்டு தான பத்திரம் எண். 1208/2024 நாள்.27.02.2024-ன்படி பெறப்பட்டதன் அடிப்படையிலும், பெயரிடப்படாத வீட்டு மனைப்பிரிவில் அமைந்துள்ள 220 மனைகளை விற்பனை செய்திட ஊராட்சி மன்றம் இறுதி ஒப்புதல் வழங்க கோருதல்.

தீர்மானம் எண்.152

காலூர் ஊராட்சி வேடல் கிராமம் - சர்வே எண்கள். 143A/1, 2, 3A, 144/1A, 1B, 1C2, 2A, 2B, 2C1, 146/2 & 147-ன் மொத்த விஸ்தீரணம் 9.60 ஏக்கர் (அ) 38860 ச.மீட்டர் பரப்பளவில் அமைந்துள்ள பெயரிடப்படாத உத்தேச வீட்டு மனைப்பிரிவில் அமைந்துள்ள 220 மனைகளை விற்பனை செய்திட ஊராட்சி மன்றம் இறுதி ஒப்புதல் வழங்கி தீர்மானம் நிறைவேற்றப்படுகிறது.

சகுந்தலா

ஊராட்சி மன்றத் தலைவர்
காலூர் ஊராட்சி.
காஞ்சிபுரம் ஊராட்சி ஒன்றியம்.

தலைவர்
காலூர் ஊராட்சி
காஞ்சிபுரம் ஊராட்சி ஒன்றியம்.

ஊராட்சி மன்றத் தலைவர், காலூர் ஊராட்சி
காஞ்சிபுரம் ஊராட்சி ஒன்றியம் அவர்களின் செயல்முறைகள்
முன்னிலை - திருமதி.S.சகுந்தலா.,

ந.க.எண்.001/2024 நாள்.13.03.2024

பொருள் - மனைப்பிரிவு ஒப்புதல் - காஞ்சிபுரம் ஊராட்சி ஒன்றியம் - காலூர் ஊராட்சி வேடல் கிராமம் - சர்வே எண்கள்.143A/1, 2, 3A, 144/1A, 1B, 1C2, 2A, 2B, 2C1, 146/2 & 147-ன் மொத்த விஸ்தீரணம் 9.60 ஏக்கர் (அ) 38860 ச.மீட்டர் பரப்பளவில் அமைந்துள்ள குடியிருப்பு வீட்டு மனைபிரிவு (Lay Out) வரைபடத்திற்கு **SWP/DTCP/ KANCHIPURAM/ LAYOUT NO:26/2024** என எண்ணிடப்பட்டு அங்கீகாரம் அளித்து ஒப்புதல் பெறப்பட்டுள்ளதை தொடர்ந்து வீட்டு மனைகள் விற்பனை செய்ய காலூர் கிராம ஊராட்சியின் இறுதி ஒப்புதல் அளித்து உத்திரவிடுதல்.

பார்வை -
1. மாவட்ட நகர் ஊரமைப்பு துணை இயக்குநர்(பொ) காஞ்சிபுரம் அவர்களின் கடித ந.க.எண்.A1O6ZSAE/ 2024/TCP நாள்.06.03.2024
2. காலூர் ஊராட்சி மன்ற தீர்மானம் எண். 152 நாள்.13.03.2024
3. மனுதாரர் திரு.பாலாஜி (ம) திரு.மலையரசன், எண்.127. பிளாட் நெ.401, டி-பிளாக், பாஞ்சாலியம்மன் கோயில் தெரு, அரும்பாக்கம், சென்னை-106 என்பவரது விண்ணப்பம்

******

உத்தரவு :-

காஞ்சிபுரம் மாவட்டம், காஞ்சிபுரம் ஊராட்சி ஒன்றியம், காலூர் ஊராட்சி வேடல் கிராமம், சர்வே எண்கள்.143A/1, 2, 3A, 144/1A, 1B, 1C2, 2A, 2B, 2C1, 146/2 & 147-ன் மொத்த விஸ்தீரணம் 9.60 ஏக்கர் (அ) 38860 ச.மீட்டர் பரப்பளவில் அமைந்துள்ள குடியிருப்பு மனைப்பிரிவிற்கான சாலைகள், பொது உபயோகம் மற்றும் மூலை முடுக்குகள் பார்வை 1-ல் காணும் மாவட்ட நகர் ஊரமைப்பு துணை இயக்குநர்/ உறுப்பினர் செயலர், காஞ்சிபுரம் அவர்களின் கடிதத்தின் வாயிலாக பெறப்பட்ட சாலை அமைப்பு Blue Print-ல் வரைபடத்தில் தெரிவித்துள்ளபடி, பூங்கா-1, பூங்கா-2, பொது உபயோக மனை, அனைத்து சாலைகள் மற்றும் மூலை முடுக்குகள் மற்றும் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு ஒப்படைக்கப்பட வேண்டிய பகுதி **காலூர் கிராம ஊராட்சியின்** பெயரில் பத்திர பதிவு செய்யப்பட்டு தான பத்திரம் எண்.1208/2024 நாள்.27.02.2024-ன்படி பெறப்பட்டுள்ளது.

மேற்படி அதனை தொடர்ந்து பார்வை 1-ல் காணும் மாவட்ட நகர் ஊரமைப்பு துணை இயக்குநர்/உறுப்பினர் செயலர் காஞ்சிபுரம் அவர்களின் கடிதத்தில் தொழில் நுட்ப ஒப்புதல் (Technical Santion) வழங்கப்பட்ட இம்மனைபிரிவு வரைபடத்திற்கு **SWP/DTCP/KANCHIPURAM/LAYOUT NO:26/2024** என எண்ணிடப்பட்டு தொழில் நுட்ப அங்கீகாரம் அளிக்கபட்டுள்ளதாலும், கிராம ஊராட்சி வளர்ச்சி கட்டணம் பெறப்பட்டுள்ளதாலும், பெயரிடப்படாத மனைப்பிரிவில் அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள **மனைகள் எண்ணிக்கை 220** வீட்டு மனைகள் விற்பனை செய்ய கீழ்காணும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு காலூர் கிராம ஊராட்சியின் இறுதி ஒப்புதல் அளித்து உத்திரவிடப்படுகிறது.

- நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என கண்டறியபட்டால் (அ) மனைபிரிவிற்கு ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் இம்மனைபிரிவிற்கு வழங்கப்பட்ட இறுதி ஒப்புதல் ரத்து செய்யப்படும்.
- சொத்தினை வாங்க விரும்பும் எந்த நபரும், மனுதாரருக்கு சொத்தின்மீது உள்ள உரிமையை தனியாக உறுதிப்படுத்திக்கொள்ளவேண்டும். மேலும் அதன் மேல் வேறு யாரேனும் தனிநபர் உரிமை கோரினால் அவர்கள் அதனை பொருத்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் முன் தீர்த்துக் கொள்ளலாம். இதனை முடிவு செய்ய கிராம ஊராட்சி பொருத்தமான அமைப்பு அல்ல.
- நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்திற்கு மாறாக மனையின் அளவுகள், சாலைகளின் அமைப்புகள், பொது ஒதுக்கீடு அளவுகள் ஆகியவற்றை மாற்றுதல் எக்காரணத்தை முன்னிட்டும் நகர் ஊரமைப்பு துறையின் ஒப்புதலின்றி செய்தல் கூடாது.
- மாவட்ட நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் / உறுப்பினர் செயலர் காஞ்சிபுரம் அவர்களின் கடித ந.க.எண். A1O6ZSAE/2024/TCP நாள்.06.03.2024-ன்படி செயல்முறை கடிதத்தில் தெரிவித்துள்ள மனைப்பிரிவு நிபந்தனைகள் தவறாது மனுதாரர் பின்பற்றவேண்டும்.
- ஊராட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்ட திறந்த வெளி ஒதுக்கீட்டு இடம் (OSR) மனைப்பிரிவு ஒப்புதல் பெறும் நபரோ அல்லது வேறு நபர்களோ விற்பனை செய்ய முயற்சித்தால் அவர்கள்மீது குற்றிவியல் நடவடிக்கை தொடரப்படுவதோடு நிலத்தை பறிமுதல் செய்யவும் நடவடிக்கை எடுக்கப்படும்.
- EWS மனைகள் 36 to 44 மற்றும் 177 to 211 ஆகியவை பொருளாதாரத்தால் பின்தங்கியவர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட மொத்தம் 53 மனைகள் ஆகும். இம்மனைகளை ஒருங்கிணைக்கவோ மாற்றி அமைக்கவோ கூடாது.
- 7.2 மீட்டர் அகலத்திற்கு அதிகமாக உள்ள எல்லாத் தெருக்களிலும் நிழல் தரும் மரங்கள் எதிர்த்தாற்போல் அடுத்தடுத்து 9.00 மீட்டர் தூரத்திற்கு மேற்படாமல் சாலையின் எல்லையிலிருந்து 1.00 மீட்டருக்குள் அமைக்கப்படவேண்டும்.
- இரு சாலைகள் சந்திக்கும் இடத்தில் அமையும் மனைகளின் மூலைகள் அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தில் கண்டுள்ள திருப்பத்தோடு (Splay) அமைக்கப்படவேண்டும்.
- தொழில் நுட்ப ஒப்புதல் அளிக்கப்படும் மனைப்பிரிவு வரைபடத்தினை பொதுமக்கள் பார்வைக்கு சம்மந்தப்பட்ட இடத்தில் 6 அடி X 4 அடி அளவுக்கு குறையாமல் கான்கிரீட் பலகையில் வரைந்து வைக்கப்படவேண்டும்.

ஊராட்சி மன்றத் தலைவர்
காலூர் ஊராட்சி.
காஞ்சிபுரம் ஊராட்சி ஒன்றியம்.

பெறுநர்

திரு.பாலாஜி (ம) திரு.மலையரசன்,
எண்.127. பிளாட் நெ.401, டி-பிளாக்,
பாஞ்சாலியம்மன் கோயில் தெரு,
அரும்பாக்கம், சென்னை-106.

நகல் - மாவட்ட நகர் ஊரமைப்பு துணை இயக்குநர்/உறுப்பினர் செயலர்(பொ), காஞ்சிபுரம் அவர்களுக்கு தகவலுக்காக அனுப்பப்படுகிறது.

நகல் - சார்பதிவாளர், காஞ்சிபுரம்(Joint-II) அவர்களுக்கு மனைகள் பத்திரபதிவு செய்ய அனுமதி செய்யும் பொருட்டு அனுப்பப்படுகிறது.

நகல் - வட்டாட்சியர், வாலாஜாபாத் அவர்களுக்கு தகவலுக்காக அனுப்பப்படுகிறது.

நகல் - The Chairman, Tamilnadu Real Estate Rugularity Authority,
No.1A.CMDA Tower II, 1st Floor, Gandhi Irwin Road, Egmore, Chennai – 8.

நகல் - ஊராட்சி செயலர், காலூர் ஊராட்சி.